


முன் குறிப்பு. இங்கிலீஷ் தலைப்பைப் பார்த்து பயந்துவிடாதீர்கள். இந்த ஸ்பானிஷ் பெயரைத் தமிழில் எழுதினால் எப்படியும் இரண்டு மூன்று ஸ்பெல்லிங் மிஸ்டேக் வருமென்கிற முன் ஜாக்கிரதை உணர்வுதான் ஆங்கிலத்திலேயே குறிப்பிட வைத்துவிட்டது! தலைப்புதான் நமக்குத் தகராறு தருமே தவிர, ஈ.டி.ஏ. செய்யும் காரியங்கள் தெரியாததல்ல. அதைப் புரிந்துகொள்வது அத்தனை ஒன்றும் சிரமமும் அல்ல. உள்ளே போகலாமா?

ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிடில் (Madrid) இருக்கிறது அந்தச் சாலை. Calle Claudio Coello. ஸ்பானிஷ் பெயர். இதையும் தமிழ்மயப்படுத்தினால் டேஞ்சர். விட்டுவிடுவோம். பெரிய பிரச்னை ஏதுமில்லை.

நான்கு பேர். கல்லூரி மாணவர்களைப் போன்ற தோற்றம். வாட்டசாட்டமாகவே இருந்தார்கள். ஒவ்வொரு அபார்ட்மெண்டாக நின்று நிதானமாகப் பார்த்தார்கள். 104 என்னும் எண் வந்ததும் நின்றுவிட்டார்கள்.

தொப்பி அணிந்த அந்த இளைஞன் கேட்டான்.

'இந்த அபார்ட்மெண்ட்தானா?'

'ஆமாம்.'

கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள். மடக்கு நாற்காலியில் அமர்ந்து வாயை அகலமாகத் திறந்தபடி பரப்பிரம்மமே என்று தூங்கிக்கொண்டிருந்த வாட்ச்மேனை சொடக்குப் போட்டு எழுப்பினான் ஒருவன்.

'ஓனரைப் பார்க்கணும்.'

அசுவாரஸ்யமாகக் கண் விழித்தார் அந்த வாட்ச்மேன். யார், என்ன, எதற்கு என்ற அநாவசியக் கேள்விகளையெல்லாம் கேட்கவில்லை அவர். ஒரு நாளைக்கு நூறு பேர் வருகிறார்கள், இல்லாத அட்ரஸைக் கேட்டு. அல்லது ஏதாவது டொனேஷன் வேண்டி. எதற்கு வீண் அலட்டல்? நேராக நான்காவது மாடிக்குக் கூட்டிக்கொண்டு போய் விட்டுவிட்டார். 'இங்கேதான் இருக்கிறார், பேசிக்கொள்ளுங்கள்.'

பத்தே நிமிடங்கள். பேசி முடித்தார்கள். நாங்கள் ஆராய்ச்சி மாணவர்கள். ஒன்றாகச் சேர்ந்து குரூப் ஸ்டடி செய்யப் போகிறோம். ஒரு சில மாதங்களுக்கு அறை வேண்டும். என்னது? வாடகை அதிகமாகுமா? பரவாயில்லை. பணம் எங்களுக்குப் பொருட்டல்ல. படிப்புதான் முக்கியம். இத்தனை பேருக்கு அறைகள் இல்லையா? தலைக்கு ஓர் அறை வேண்டியதில்லை ஐயா. ஓர் அறை போதும். கட்டை சாய்க்க ஓரிடம். அவ்வளவுதான். ஒரு கையில் அட்வான்ஸைக் கொடுத்துவிட்டு,

மறு கையில் சாவியை வாங்கிக்கொண்டார்கள்.

மறுநாள் இரவு, ஆளுக்கொரு பெட்டியை உருட்டிக்கொண்டு வந்தார்கள். அபார்ட்மெண்ட்டின் அடித்தளத்தில் இருந்தது அவர்கள் அறை. வேண்டுமென்றே கேட்டு வாங்கியது.

திரைச்சீலையை விலக்கி, ஜன்னலை அகலமாகத் திறந்து வைத்தான் ஒருவன். நான்கைந்து புத்தகங்களை எடுத்து கட்டிலில் பரப்பி வைத்தான் மற்றொருவன். எல்லாமே குண்டு குண்டு புத்தகங்கள். ஆய்வாளர்கள் அல்லவா?

'நாளை முதல் நம் வேலை ஆரம்பமாகிறது.'

சமர்த்தாகப் படுத்துத் தூங்கிப்போனார்கள். பொழுது விடிந்ததும் பல் தேய்த்து, ஹாட் சாக்லேட் டிரிங் சாப்பிட்டுவிட்டு சுறுசுறுப்புடன் பணியை ஆரம்பித்தார்கள். உயர் ரக பைனாகுலர், அதற்குண்டான ஸ்டாண்டில் பொருத்தப்பட்டது. ஜன்னலுக்கு அருகே தள்ளிக்கொண்டு போய் நிறுத்தினார்கள்.

இன்று நீ, நாளை நான். ஷிஃப்ட் போட்டுக்கொண்டு கண்காணிக்க ஆரம்பித்தார்கள். சுலபமான வேலைதான். ஜன்னலுக்கு அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு சாலையில் செல்லும் வாகனங்களை நாள் முழுக்க கொட்டக் கொட்ட பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். கைக்கு எட்டும் தொலைவில் ஒரு கூடை. முழுக்க முழுக்க நொறுக்குத் தீனி. பாட்டுக் கேட்க அனுமதி உண்டு. அவ்வளவுதான். மற்றபடி, மூச்சா போகவேண்டும் என்றால் கூட, ஒருத்தரை உட்கார வைத்துவிட்டுத்தான் ஒதுங்க வேண்டும்.

அவர்களுக்கு இடப்பட்ட உத்தரவு இதுதான். ஜாலியாக, ஃப்ரீயாக இருங்கள். வேளாவேளைக்குச் சாப்பிடுங்கள். சாலையில் போகும் எல்லா வாகனங்களையும் நன்றாக ஆராயுங்கள். நமக்குத் தேவை, ஒரே ஒரு கார். லூயி கரீரோ பிளான்கோவின் கார். (Luis Carrero Blanco). எத்தனை முறை அந்த கார் இந்தச் சாலையைக் கடந்து செல்கிறது? வாரத்துக்கு எத்தனை முறை? மாதத்துக்கு எத்தனை முறை? ஒரு நாளைக்கு எத்தனை முறை? எந்தெந்த நேரத்தில்? வண்டியில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? முன் சீட்டில் யார்? பின் சீட்டில் யார்?

அவர்கள் கமாண்டோக்கள். சிகியா (Txikia) என்பது அவர்களுக்கு வழங்கப்பட்ட கோட் நேம். தலைமை அலுவலகத்திலிருந்து வரும் உத்தரவுகள் அனைத்தும் இந்தப் பெயரில்தான் வந்து சேரும். என்ன உத்தரவு வரும், எங்கிருந்து வரும் என்றெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. கொடுக்கும் வேலையை சிரத்தையுடன் செய்து முடிப்பதற்கு மட்டுமே அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் யோசிக்கக்கூடாது. அவர்களுக்கும் சேர்த்து தலைமைச் செயலகம் யோசித்துவிடும்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது, சுலபமான வேலையாகத் தோன்றினாலும் இப்போது அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அஸைன்மெண்ட் மிகவும் ரிஸ்க்கானது. இந்தா ஃபோட்டோ, சுட்டுத்தள்ளிவிட்டு வா என்று சொன்னால் செய்துவிடலாம். சட்டுப்புட்டென்று சுட்டு முடித்துவிட்டு ஓடிவந்துவிடலாம். ஆனால், வேவு பார்ப்பதில் ஆபத்து அதிகம். சம்பந்தப்பட்ட நபர் கொஞ்சம் பெரிய ஆளாகப் போய்விட்டால் ரிஸ்க் ஃபாக்டர் எக்கச்சக்கம்.

ராக்கோழிபோல் கண் விழித்து வேலை செய்தார்கள். அட்டவணை ஒன்று தயாரானது. கடிதம் ஒன்றை எழுதி தலைமைக்கு அனுப்பி வைத்தார்கள். ஒரு நாளைக்கு இத்தனை முறை அவரது கார் சாலையைக் கடந்து போகிறது. டிரைவர். உடன் ஒரு பாடிகார்ட். அவ்வளவுதான். அந்த கார் தினமும் எங்கே போகிறது என்பதையும் கண்டுபிடித்துவிட்டோம். San Francisco de Borja என்னும் தேவலாயத்துக்கு. வேறு தகவல்கள் வேண்டுமா? எழுதிப் போட்டுவிட்டுக்

காத்திருந்தார்கள்.

போரடித்தது. அங்கே இங்கே சுற்றினார்கள். ஒன்றிரண்டு படம் பார்த்தார்கள். நிறைய புகைத்தார்கள். புதிய மது வகைகளைத் தேடித்தேடி அருந்தினார்கள். இடையில் ஒன்றிரண்டு முறை அந்த அபார்ட்மெண்ட் ஓனர், அறைக்கு வந்தார். 'தம்பிகளா, இடம் வசதியாக இருக்கிறதா? கூட்டிப் பெருக்க வேலையாள் வருகிறாரா? காற்று வருகிறதா? ஃபேன் சுத்துகிறதா? மூட்டைப்பூச்சி கடிக்கவில்லையே?'

ஒரு சில தினங்களில் கூரியர் வந்து சேர்ந்தது. 'அட்டவணை நன்றாக இருக்கிறது. கூடுதல் தகவலுக்கு நன்றி. தொடர்ந்து அதே அபார்ட்மெண்ட்டில் தங்கிக்கொள்ளுங்கள். யாருக்கும் சந்தேகம் வரவேண்டாம். அடுத்த சில மாதங்களுக்கு நீங்கள் செய்ய வேண்டியது இதைத்தான். San Francisco de Borja தேவாலயத்துக்குச் செல்லும் வழியில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டவேண்டும். அதாவது சுரங்கப்பாதை. புரிந்ததா?'

அவர்களுக்குப் புரியவில்லை. காரைக் கண்காணிக்கச் சொன்னார்கள். ஓகே. அநேகமாக லூயி கரீரோவின் தலைக்குக் குறிவைத்திருப்பார்கள். வழியில் போட்டுத்தள்ளுவதுதான் திட்டமாக இருக்கும். சரி. ஆனால் பள்ளம் எதற்குத் தோண்டவேண்டும்? கொன்றபின் புதைக்கவா? நட்ட நடு ரோடிலா? தெரியவில்லை. தெரியவேண்டியதுமில்லை.

மேப்பை எடுத்து பாக்கெட்டில் செருகிக்கொண்டு கிளம்பினார்கள். சிவப்பில் வட்டமிடப்பட்ட அந்தப் பகுதியை நெருங்கினார்கள். நம் ஊர் சாலைகள் போன்றதல்ல மாட்ரிட் நகரச் சாலைகள். நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் கடப்பாரையைக் கொண்டு போய்க் கொத்த முடியாது. கேபிள் டிவி போடுகிறோம், கட் அவுட் வைக்கிறோம், ஆளுங்கட்சி மீட்டிங் என்று சாக்குப்போக்குச் சொல்ல முடியாது.

தினமும் அந்தச் சாலைக்கு வந்தார்கள். அருகில் இருந்த காபி ஷாப்பில் மணிக்கணக்கில் உட்கார்ந்து கதையடித்தார்கள். கவனம் காபியில் அல்ல; அந்தச் சாலையில்.

ஒரு வழி கிடைத்தது. வட்டமிடப்பட்ட பகுதிக்கு நேர் எதிரே இருந்த வீட்டை நெருங்கினார்கள்.

'நாங்கள் மாணவர்கள். சிற்பக்கலை படித்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் உதவி தேவை!'

'சொல்லுங்கள்.'

'கலை, கலை என்று இத்தனை காலம் என்னென்னவோ செய்துவிட்டோம், போரடிக்கிறது. உருப்படியாக ஒரு காரியம் செய்யலாம் என்று உத்தேசம். இந்தப் பகுதியில் ஒரு சப்வே அமைக்கலாம் என்று திட்டம். அதற்கு முன்னால் பெரிய பள்ளம் ஒன்றை இங்கே தோண்டவேண்டும். நாளை தொடங்கி நாங்கள் இங்கே வந்து வேலை செய்யப்போகிறோம். ஆட்சேபனை ஏதும் இல்லையே!'

'ச்சேச்சே. நல்ல காரியம்தானே.'

ஒதுங்கிக்கொண்டார் அவர். பகுதிவாசிகளிடம் பேசினார்கள். இதே காரணம்தான். எல்லோரிடமும் சொன்னார்கள். அரசாங்கத்தின் ஒப்புதல் இருக்கிறது என்றார்கள். எந்தவித பிரதி உபகாரத்தையும் எதிர்பார்க்காமல் செய்யும் பணி என்று சொல்லிவிட்டு அடக்கமாக கைகளைக் கட்டிக்கொண்டார்கள்.

அவ்வளவாகப் பயன்படுத்தப்படாத சாலையாக அது இருந்தது அவர்களது அதிர்ஷ்டம். லோக்கல் போலீஸ் மற்றும் கார்ப்பரேஷன் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி இருக்கிறதா? எதற்கு

இங்கு சப்வே? அதற்கு இப்போது என்ன அவசரம்? என்றெல்லாம் யாரும் அவர்களைக் கேட்காமல் விட்டது கூடுதல் அதிர்ஷ்டம்.

நகர வேலையாட்கள் பயன்படுத்தும் யூனிஃபார்மை தேடிப் பிடித்து வாங்கிக்கொண்டார்கள். கடைத்தெருவுக்குச் சென்று தேவைப்படும் உபகரணங்களை வாங்கிக்கொண்டார்கள். கொத்துவதற்கு, கிளறுவதற்கு, கொண்டு போய் கொட்டுவதற்கு.

அடுத்த ஐந்து மாதங்களுக்கு தொடர்ந்து தோண்டிக்கொண்டே இருந்தார்கள். டென் டு ஃபைவ். சில நாள்கள் ஓவர்டைம். கொத்து, கொத்து என்று கொத்திக்கொண்டே இருந்தார்கள். பத்து மணிக்கு காபி அல்லது டீ. மதியம் சாண்ட்விச். சாயந்திரம், கொரிக்க கொஞ்சம் போல் ஏதாவது. போதும். அதிகம் சாப்பிட்டால் தூக்கம் வரும். தூக்கம் வந்தால் தோண்ட முடியாது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தத் தோண்டினார்கள். எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து, கடலுக்கடியில் குடைந்து சென்றபோதுகூட, அத்தனை பாடு பட்டிருக்க முடியாது.

ஸ்பெயின் தேசத்தின் சிம்மசொப்பனமாக இந்த நிமிடம் வரை நீடிக்கும் ETA என்னும் அமைப்பு தோண்டும் பள்ளம் அது.

இந்த இடத்தில் ஒரு பேரா அறிமுகம் பண்ணிக்கொண்டு விடலாம். ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மூன்றும் ஒன்று சேர்ந்து தடை செய்த அதிபயங்கரவாத அமைப்பு இது. தனி பாஸ்க் (Basque) தேசம். யாராலும் கட்டுப்படுத்தப்படாத, அளவற்ற சுதந்திரம் கொண்ட ஒரு பிராந்தியம். இதுதான் அவர்கள் கோரிக்கை. அகிம்சை வழியில் மட்டுமே போராடவேண்டும். பூச்சி, புழுவுக்குக்கூட சேதம் ஏற்படுத்தக்கூடாது என்னும் உயர்ந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்ட அமைப்பு. எல்லாம் கொஞ்ச காலத்துக்குத்தான். பிறகு, பூச்சி, புழுக்களைத் தவிர, அனைத்து ஜீவராசிகளையும் பக்காவாக நசுக்கிக் கொல்ல ஆரம்பித்தார்கள்.

அயல்நாட்டு கார் கம்பெனிக்கு நிகராக லோகோ எல்லாம் வடிவமைத்து வைத்திருக்கிறது ETA. வெறும் லோகோ மட்டுமல்ல அது. அவர்களது பிரகடனமும் அதுவேதான். ஒரு சுத்தியல். அந்தச் சுத்தியலைச் சுற்றி, ஒரு பாம்பு. சுத்தியல் என்பது அரசியல். அதாவது அவர்கள் கோரிக்கை. பாம்பு, ஆயுதப் போராட்டத்துக்கான சிம்பல். ஆயுதத்தை வைத்துக்கொண்டு அரசியலில் ஒரு கலக்குக் கலக்கவேண்டும் என்பதாகப் பொருள் கொள்ள வேண்டும். சத்யமேவஜெயதே போல் அவர்களுக்கும் ஒரு மோட்டோ உண்டு. Bietan jarrai. என்றால், இரண்டிலும் ஜெயிப்போம் என்று பொருள்.

சுத்தியல்? அரசியல்? எங்காவது பொறி தட்டுகிறது? தட்டினால், நீங்கள் நினைத்தது சரி. தன்னை ஒரு மார்க்ஸிய-லெனினிய அமைப்பு என்றுதான் அழைத்துக் கொள்கிறது ETA.

அது சரி, அந்தப் பள்ளம் தோண்டினார்களே, அது யாருக்கு?

பெரிய விஷயம் ஏதுமில்லை. ஓர் அரசாங்க உத்யோகஸ்தருக்காகத் தோண்டப்பட்ட பள்ளம் அது. அவரைப் பிரதம மந்திரி என்று எல்லாரும் சொல்வார்கள்.